# நிதிபெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்களும் அதன் அடைவுமட்டமும்: மருதமுனையைமையப்படுத்தியஆய்வு

**M.I.MajithaBanu[1]and S.M.M.Mazahir[2]**

*[2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil.*
*majithafiras@gmail.com, smmmazahir@gmail.com*

***ஆய்வுச் சுருக்கம்***

தற்காலத்தில் வறுமையை ஒழிக்குமுகமாக பல்வேறுநிதியியல்சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதிலும் குறிப்பாக சிறுகைத்தொழிலிற்கான நிதியுதவிகள் உலகளாவியரீதியில் வறுமை ஒழிப்பிற்கான பிரதான கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வறுமை ஒழிப்பும் சிறுகைத்தொழில்துறை மேம்பாடும் எதிர்பார்க்கப்பட்டுவருகின்றது. ஆகவே சிறுகைத்தொழிலிற்கான நிதிவழங்கல் மூலம் வறுமை ஒழிப்பு மற்றும் சிறுகைத்தொழில்துறைமேம்பாடு என்பன ஏற்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறியுமுகமாக, சிறுகைத்தொழிலிற்கு நிதியுதவிவழங்கும் நிறுவனங்களைக் கொண்டதும்,சிறுகைத்தொழிலில் கணிசமான ஈடுபாடு கொண்டதுமான கிழக்குமாகாணம், அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை கிராமத்தை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,எதிர்பார்க்கப்பட்ட அடைவ மட்டத்தினை அடையாமைக்கான காரணங்களைக் கண்டறிவதும் இவ்வாய்வின் ஒரு நோக்கமாக உள்ளது. இவ்வாய்வு தொகைரீதியான (Quantitative) தரவுகளை பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்வில் முதன்மைத்தரவுகள் (Primary Data) பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகள், மருதமுனையின் மூன்று நிதிவழங்கல் நிறுவனங்களுக்கும், நிதிபெற்ற முப்பது நபரிற்கும் வினாக்கொத்தினை வழங்குவதன் மூலம் பெறப்பட்டன. இதன் தொகை ரீதியான தரவுகள் MicrosoftOffice, Excell மென்பொருளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படுள்ளன. பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததில் இருந்து நிதிவழங்கப்பட்ட நோக்கங்களான வறுமையை ஒழித்தல் மற்றும் சிறுகைத்தொழில் துறையினைமேம்படுத்தல் என்பன ஓரளவுசிறப்பாகக் காணப்பட்டபோதிலும் பூரணமான அடைவ மட்டத்தினைப் பெறவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களாக நிதிபெற்றோரது முயற்சி போதாமை, விதவைப் பெண்கள் உதவியின்மையால் தொழிலை இடை நிறுத்தியமை, பொருத்தமான தொழில் வழிகாட்டல் கிடைக்காமை ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வின் இறுதியில், நிதியுதவி வழங்கல் மூலம் வறுமை ஒழிப்பு மற்றும் சிறுகைத்தொழில் விருத்தி ஆகியவற்றை வெற்றிகரமாக அடைவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**KEY WORDS**: சிறுகைத்தொழில் , நிதியுதவி, வறுமை ஒழிப்பு, மருதமுனை

**அறிமுகம்**

தற்காலத்தில் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பாரிய விடயங்களில் வறுமையும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில், வறுமையினால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. களவு, கொலை, தற்கொலை போன்ற குற்றச்செயல்கள் ஒருபுறம், உடல், உள நோய்கள், உயிரிழப்பு, போஷாக்கற்ற குழந்தைப்பேறு, கல்வியறிவின்மை என மறுபுறமும் பலவாறான தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றமை கண்கூடு.

தற்கால உலகில் பரவலாக ஒரு நேர உணவைக்கூடப் பெற்றுக்கொள்வதற்கு கஷ்டப்படுபவர்களும் வாழ்கின்றனர். அதேவேளை உணவு வசதி பெற்றவர்களில் பெரும்பாலானோர் உடை, உறையுள் கல்விச் செலவு என அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத நிலையிலும் வாழ்கின்றனர். இத்தகையோர் தொழில்வாய்ப்பின்மை, அங்கவீனம், தீராத நோய், முதுமை, ஆதரவின்மை,போதியளவு அறிவின்மை,சோம்பேறித்தனம், அதிஷ்டமின்மை போன்ற பல்வேறுகாரணங்களால் இவ்வாறு வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதனை அவதானிக்க முடிகின்றது. (Gail Sahar Zucker & Bernard Weiner, 1993)

இந்நிலையில் இந்த வறுமையை ஒழிக்கவேண்டும் என உலகளாவிய ரீதியில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் தொழில் துறையில் இவர்களை ஈடுபத்தி இவர்களது வறுமை நிலையை நீக்குவது இவற்றுள் முக்கிய வழிமுறையாகக் காணப்படுகின்றது.ஏனெனில், சிறுகைத்தொழில்கள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் போது, அது நாட்டின் பொருளாதார விருத்தியில் தாக்கம் செலுத்தவல்லது. (Omobolanle Okiki Sanni, 2009)

இந்தவகையில் சிறு கைத்தொழிலிற்கான நிதி வழங்கும் நிறுவனங்கள் உலகில் பரவலாக உருவாகி வருகின்றமை கண்கூடு. குறிப்பாக இலங்கையிலும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இச்சேவையை செய்வதில் ஈடுபட்டு வருகின்றன.அவை வட்டியுடன் கூடிய அல்லது வட்டியற்ற நிதிகளை வழங்கும் நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக எனது ஆய்வுப்பிரதேசமான மருதமுனைக்கிராமத்திலும் இவ்வாறு சிறுகைத்தொழிலிற்கான நிதி வழங்கும் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

எனவே இவ்வாறு நிதி வழங்குவதன் நோக்கங்களான வறுமையை ஒழித்தல் மற்றும் சிறுகைத்தொழில்துறையை விருத்தி செய்தல் போன்றன, இவ்வாறு நிதி பெற்றுச் சிறுகைத்தொழில் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வறியோர்கள் மத்தியில் எந்தளவு தாக்கவிளைவினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை அறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேச அறிமுகம்**

இலங்கை அம்பாரை மாவட்டத்தில் உள்ள மருதமுனை பிரதேசத்தை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ‘‘மருதமுனையில் நிதி பெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறு கைத்தொழில்கள்’’ தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதால் மருதமுனையில் நிதிபெற்று சிறுகைத்தொழில் மேற்கொள்ளும் மக்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இப்பிரதேசமானது1.03சதுர கிலோமீற்றர் பரப்பெல்லையை கொண்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

வறுமையை ஒழிப்பதற்கான முக்கிய கருவியாக சிறுகைத்தொழிலிற்கான நிதிவழங்கலானது பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனது ஆய்வுக்குட்பட்ட பிரதேசமான மருதமுனைக்கிராமத்திலும் வறுமைக்குட்பட்டோர் காணப்படும் அதேவேளை சிறுகைத்தொழிலிற்கான நிதிவழங்கல் நிறுவனங்களும் காணப்படுவதனால்,இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நிதிவழங்கல் மூலமான சிறுகைத்தொழில்கள் மூலம் அம்மக்கள்ளின் வறுமை நிலை நீங்கியுள்ளதா? மற்றும் சிறுகைத்தொழில்துறை மேம்பட்டுள்ளதா? என்பதை அறிவது இவ்வாய்வின் மையப்பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இப்பிரதேசத்தில் நிதி நிறுவனங்களிலிருந்து நிதிபெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்கள் மூலம் குறிப்பிட்ட அம்மக்களின் வறுமை நிலை குறைந்துள்ளதா? என்பதை ஆய்வு செய்வது இவ்வாய்வின் பிரதானமான நோக்கமாக இருக்கும் அதேவேளை, இவ்வாறு நிதி வழங்கல் சேவைகள் மூலமாக சிறுகைத்தொழில்துறை மேம்பட்டுள்ளதா? என்பதை அறிவதும் இவ்வாய்வின் மற்றுமொரு நோக்கமாக உள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வுக்காக,மருதமுனையில் காணப்படும் நிதி வழங்கல் நிறுவனங்களுள் ஆய்வாளரால் தேர்வு செய்யப்பட்டநிதி வழங்கல் நிறுவனங்களான Micro Investment Project, Loan for Guidance for Self Employment, Divinaguma Community Based Bank ஆகியமூன்று நிதி வழங்கல் நிறுவனங்களையும்,இந்நிதி வழங்கல் நிறுவனங்களிலிருந்து நிதி

பெற்றோரிலிருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட முப்பது நபர்களையும் கொண்ட மாதிரித்தொகையானது ஆய்வாளரினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.இவ்வாய்வு தொகை ரீதியான (Quantitative) தரவுகளை பயன்படுத்தியுள்ளது.

இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள்(Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர்காணல் (Interview) போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள், முன்னைய ஆய்வுகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வின் கோட்பாட்டினை உருவாக்குவதற்கு துணை செய்தன.

இவ்வாறாக சேகரிக்கப்பட்ட தரவுகள் MS – EXCELமூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வு**


‘‘நிதி பெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறு கைத்தொழில்களும் அதன் அடைவு மட்டமும்’’ எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதால் அடைவு மட்டமானது, நிதிவழங்குனரின் நோக்கங்களையும் நிதிபெறுநர்கள் மத்தியில் அந்த நோக்கங்கள் எந்நிலையில் காணப்படுகின்றன என்பதனையும் அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படவுள்ளது.

இந்தவகையில், ஆய்வுக்குட்படுத்ததப்பட்ட நிதிநிறுவனங்களின் முகாமையாளர்களோடு நடாத்திய நேர்காணலின் பிரகாரம்சிறுகைத்தொழிலிற்கான நிதிவழங்கலின் நோக்கங்களாக, வறியோருக்கு அவர்களது நிலையை மேம்படுத்திக் கொள்ள உதவுதல் மற்றும் மருதமுனைக் கிராமத்தில் சிறுகைத்தொழில் துறையை விருத்திசெய்தல் போன்றன இனங்காணப்பட்டுள்ளன.

எனவே, நிதி வழங்குனர்களின் இத்தகைய இலக்குகள் நிதிபெறுநர்களால் அடையப் பெற்றுள்ளதா என்பதனை வினாக்கொத்து பகுப்பாய்வில் கண்டுகொள்ள முடிந்தது.

நிதிபெற்றவர்களின் நிலை குறித்து நோக்கும் போது அவர்கள் அனைவரும் வறுமை காரணமாகவே நிதிபெற்றுள்ளனர் என்பதை பின்வரும் வரைபடம் மூலம் அறிய முடிகிறது.


வரைபடம் 01 – நிதிபெற்றவர்களின் நிலை




வரைபடம் 01 இன்படி, நிதிபெற்றவர்கள் ஏதோவொரு வழிமுறையில் வறுமைக்குட்பட்டுள்ளனர் என்பதனை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக விதவைப் பெண்கள், விவாகரத்து அடைந்தவர்கள் மாற்றுத்திறன் கொண்டவர்கள், நோயாளிகள் ஆகியோரிடையே வறுமை நிலை நிலவுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளன. எனினும்,‘‘சாதாரணமானவர்கள்’’ எனப் பதிலளித்தவர்கள் அனைவரும் உழைப்பதற்கான ஆரோக்கிய நிலையிருந்தும் வறுமை நிலைக்குட்பட்டோராகக் காணப்படுகின்றனர். எனவே, தமது நிலையை மேம்படுத்துவதற்காக சிறுகைத்தொழிலில் ஈடுபடும் நோக்கில் நிதியுதவி பெற்றுள்ளனர்.

இவ்வாறு நிதி பெற்றவர்களில் தமக்கான வாழ்வாதாரத்தை தேடவேண்டும் எனும் நோக்கில் தொழிலை ஆரம்பிப்பதற்கும் தொழிலை விருத்தி செய்வதற்குமென நிதி பெற்றுள்ளனர் என்பதனை வரைபடம் 02 மூலம் அறிய முடிகிறது.

வரைபடம் 02 –நிதி பெற்ற நோக்கம்




எனவே, தமது வறுமை நிலையை நீக்க வேண்டும் என்ற முயற்சியில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கிலும் 1/3 பங்கிற்கும் குறைவானோர் தமது தொழிலை விருத்தி செய்யும் நோக்கிலும் நிதி பெற்றுள்ளமையை வரைபடம் 02 காட்டுகின்றது. இதன்படி நோக்கும் போது,


வறுமைக்குட்பட்ட எத்தனையோ நபர்கள் வீதிகளில் கையேந்தி திரியும் நிலையில் காணப்படும் அதேவேளை,தமது வறுமையை நீக்க தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களும் காணப்படுகின்றனர் என்பதனை இத்தரவுப் பகுப்பாய்வு மூலம் அறிய முடிகிறது.

எனவே, சமூகத்தில் வறுமைக்குட்பட்டவர்கள் தொழில் முயற்சியில் ஈடுபட விருப்பத்துடன் இருந்தும் கூட நிதிப்பற்றாக்குறை மற்றும் ஊக்கப்படுத்தலின்மை காரணமாக மேலும் வறுமை நிலைக்குட்படுகின்றனர் என்பதனையும் இதன் மூலம் அவதானிக்க முடிகின்றது. எனவே வட்டியற்ற நிதிவழங்கல் நிறுவனங்கள் மேலும் உருவாவதானது சிறுகைத்தொழில் துறையை மேலும் விருத்தி செய்வதற்கும் ஏழைகளின் வறுமை நிலையை குறைப்பதற்குமான சிறந்த தீர்வாக அமையும் என்பதை இப்பகுப்பாய்விலிருந்து அறியமுடிகிறது.

மேலும், இவ்வாறு நிதிபெற்றவர்கள் குறிப்பாக நெசவு, நூல் நூற்றல், இடியப்பம் தயாரித்தல், ஐஸ் கிறீம் தயாரித்தல், காலை, மாலை உணவு தயாரித்து விற்றல், புடைவை வியாபாரம், தையல் தொழில், கோழி வளர்ப்பு, பசு வளர்ப்பு ஆகிய சிறு கைத்தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

எனினும், இச்சிறு கைத்தொழில்களுக்காக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி போதுமானதாக அமைந்ததா என்பதனை வரைபடம் 03 மூலம் அறிய முடிகிறது.

வரைபடம் 03 – வழங்கப்பட்ட நிதியின் போதுமான நிலை





ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களினால் ஒரு இலட்சத்துக்கும் குறைவான நிதிகளே வழங்கப்படுவதாக அந்நிறுவனங்களின் முகாமையாளர்களோடு மேற்கொண்ட நேர்காணலின் மூலம் அறியக்கிடைத்தது. எனினும், இந்நிதித் தொகையானது வரைபடம் 03 இன்படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் பெரும்பாலானோருக்கு தனது தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக அமையவில்லை என்பதனை அறியமுடிகிறது. ஏனெனில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் அதிகமானோர் நெசவுத் தொழிலிற்காக நிதியுதவி

பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுள் இத்தொழிலை ஆரம்பித்தவர்களும், விருத்தி செய்தவர்களும் உள்ளனர். அதாவது, ஆரம்பத்தில் வேறொருவரின் கைத்தறி இயந்திரத்தில் நெசவு செய்த ஒருவர் தான் கூலியை மட்டுமே பெறுவார். இவ்வாறு இவர் பெறும் கூலியானது, வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இக்காலத்தில் தனது வாழ்வாதாரத்திற்குப் போதுமானதாக அமையாது. எனவே இவர்கள் சொந்தமாக கைத்தறியினை கொள்வனவு செய்து நெசவு செய்யும் போது சற்று கூடுதலான வருமானத்தை பெற எண்ணுகின்றனர். எனவே, கைத்தறி இயந்திரம் உட்பட ஏனைய உப பகுதிகள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக பணம் தேவைப்படுகிறது.
மேலும்,இதே போதாமை நிலையானது பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு,ஐஸ் கிறீம் தயாரிப்பு, புடைவை வியாபாரம் போன்ற சிறுகைத்தொழில்களை மேற்கொள்வோருக்கும் ஏற்பட்டுள்ளது.
எனவே இவர்கள் தமது போதாமையை பூர்த்தி செய்யவென மேலும் சில தனிநபர்களிடம் மற்றும் நிறுவனங்களிடம் கடன் பெற்றுள்ளதாக வினாக்கொத்தில் வழங்கப்பட்ட திறந்த வினாவிற்கு விடையளிக்கும் போது தெரிவித்துள்ளனர்.

சிறு கைத்தொழில் மூலம் பெற்ற வருமானம் சிறிதளவாக இருக்கும் அதேவேளை, இவ்வாறு தமது நிதித் தேவையை பூர்த்தி செய்ய பல இடங்களில் கடன் பெற்றுள்ளதால், மாதாந்தம் பல இடங்களுக்கு பணம் மீளச்செலுத்தவேண்டி ஏற்படுகிறது. இந்நிலையானது, அவர்களுக்கு தமது குடும்பச்சுமைகளை நீக்குவதற்கு தடையாக அமைகின்றது.
மேலும், இவ்வாறு நிதிபெற்று அதன்மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்களின் விருத்திநிலை பற்றி அறிவது இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். எனவே இவ்வாய்வுப்பிரதேசமான மருதமுனையில் நிதிபெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்களின் நிலை பற்றி வரைபடம் 04 மூலம் அறியலாம்.

வரைபடம் 04 - சிறுகைத்தொழில்களின் நிலை




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நபர்களில் 14%வீதத்தினரது தொழிலின் விருத்தி நிலையே சிறந்ததாக அமைகின்றது. அதாவது ஆரம்ப நிலையை விட தமது தொழில் ஓரளவு

விருத்தியடைந்து செல்வதாக கள ஆய்வின் போது தெரிவித்தனர். எனினும் பெரும்பாலானோர் (72%) தனது தொழிலில் எவ்விதவிருத்தியையும் காணாத அதேவேளை (14%) வீதமானோர் வீழ்ச்சி நிலைக்கும் உட்பட்டுள்ளனர்.

அதாவது, தமது தொழிலில் விருத்தி நிலையை அடைந்தவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் பெரும் முயற்சியுடனும் நுட்பங்களைப் பயன்படுத்தியும் தமது தொழிலில் ஈடுபட்டுள்ள அதேவேளை, தாம் தொழிலை ஆரம்பிக்கவென பெற்ற கடனை மீளச் செலுத்தி முடித்த பின்னர், மீண்டும் தனது தொழிலின் விருத்திச் செயற்பாடுகளுக்கென நிதியுதவி பெற்றுள்ளனர். இதனால் இவர்களது தொழில் நிலை சற்று விருத்தி நிலையில் உள்ளது.
எனினும், எவ்வித விருத்தியுமடையாத அல்லது வீழ்ச்சியடைந்தோரை நோக்கும் போது, இவர்களுள் சிலர் கூடிய தொகை நிதியுதவி பெற்றால் அதனை மீளச்செலுத்த முடியுமா என அஞ்சி குறைவான தொகையை பெற்று தமது தொழிலை ஆரம்பித்து அதன்மூலம் சிறுதொகை வருமானத்தையே பெற்றுள்ளனர். இதனால் இத்தொகையானது குடும்பச் செலவீனங்களுக்கும் கூட போதுமானதாக அமையாததால் இவர்களால் தமது தொழிலை விருத்தி செய்ய முடியவில்லை.

மேலும் சிலர்,தொழிலை கொண்டு நடத்த போதியளவு அறிவின்மையால் தொழிலின் விருத்தி பற்றி சிந்திக்கவுமில்லை. பிறரால் வழிகாட்டலுக்குட்படவுமில்லை. எனவே, தான் செய்த தொழிலின் மூலம் கிடைப்பதைக் கொண்டு வாழும் அதேவேளை இன்னும் கடன்சுமைகளுக்கும் உட்பட்டுள்ளனர்.

இன்னும் சிலரை பொறுத்தளவில், அதிக எண்ணிக்கையான குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கணவன் குடும்பத்தின் மீதுஅக்கறை செலுத்தாமை போன்ற காரணங்களினால்,மனைவி உழைக்கும் வருமானமானது உணவு, பிள்ளைகளின் கல்விச் செலவு, நீர், மின் கட்டணங்கள், கடனை மீளச் செலுத்தல் போன்ற தேவைகளை நிறைவேற்ற கூட போதாமல் இருப்பதால் இவர்களால் தொழிலின் விருத்திநிலை பற்றி சிந்திக்க முடிவதில்லை.
மேலும், நிதிபெற்று சிறுகைத்தொழில் செய்யும் விதவைப் பெண்களைப் பொறுத்தவரையில் தனது தொழிலை கொண்டு நடாத்த உதவியின்மையால் இவர்களது தொழிலும் விருத்திக்குட்படவில்லை.

இன்னும் சிலரைப் பொறுத்தவரையில், தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நுட்பங்கள் பற்றிய அறிவின்மையால் தற்காலப் போட்டிச்சந்தைக்கு முகம்கொடுக்க முடியாமல் பின்வாங்கியுள்ளனர். அதாவது சுமூகமாக சென்று கொண்டிருந்த தனது வியாபரத்திற்கு போட்டியாக ஏனையோர் குறித்த வியாபாரத்தை அதைவிட சிறப்பாக செய்யும் போது, புதிய உக்திகளை கையாண்டு குறித்த போட்டிநிலையை வெல்லும் ஆற்றல் இன்மையால் மனம் தளர்ந்து, தான்செய்த தொழிலை கைவிடும் நிலைக்கு உட்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, நிதிவழங்கும் நிறுவனங்கள் செயற்படும் அதேவேளை இத்தகைய வறியோருக்கு தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஊக்குவிப்புக்கள் போதியளவு வழங்கப்படாமையும் இச்சிறுகைத்தொழில்களின் போதியளவு விருத்தியின்மைக்கான காரணங்களாக அமைகின்றன.

மேலும், ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரின் வறுமை நிலையானது அவர்களது தொழில் முயற்சி மூலமாக நீங்கியுள்ளதா? என்பதை கண்டறிவதும் இவ்வாய்வின் மற்றொரு முக்கிய நோக்கமாக அமைவதால், ஆய்வுக்குட்பட்டோர் தமது சிறுகைத்தொழிலின் மூலம் அடைந்த அடைவுகள் குறித்து அறியும் நோக்கில்,அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளமையை அட்டவணை 01 இல் அவதானிக்கலாம்.

அட்டவணை 01 - சிறுகைத்தொழிலின் மூலம் அடைந்த அடைவுகள்

| S.No | QUESTIONS | FREQUENCY | PERCENTAGE |
|---|---|---|---|
| 1 | வீடு கட்டுதல்/ புனர்நிர்மாணம் செய்தல் | 0 | 0% |
| 2 | காணி வாங்குதல் | 0 | 0% |
| 3 | குழந்தைகளைக் கற்பித்தல் | 25 | 83% |
| 4 | தொழிலை மேம்படுத்துதல் | 4 | 13% |
| 5 | கடன் சுமைகளை நீக்குதல் | 8 | 26% |
| 6 | வங்கியில் சேமித்தல் | 0 | 0% |

அட்டவணை 01 இன்படி, வீடு கட்டுதல், வீட்டை புணர் நிர்மாணம் செய்தல், காணி வாங்குதல், வங்கியில் சேமித்தல் என எவ்வித முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டடோரால் தமது சிறுகைத்தொழில் மூலம் மேற்கொள்ள முடியவில்லை. எனினும் தங்களால் மேற்கொள்ளப்பட்ட சிறுகைத்தொழில் மூலம் பெற்ற வருமானத்தினால் பெரும்பாலானோரால் தம் குழங்தைகளைக் கற்பிக்க முடிந்துள்ளது. ஆனாலும் கூட, இவர்களுள் சிலர் தம் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கு இவை பூரணமாக போதுமானதாக அமையவில்லை எனவும் தெரிவித்தனர்.

மேலும், தாம் பெற்ற வருமானம் மூலம் தமக்கு இருந்த கடன் சுமைகளை நீக்க முடியுமாக இருந்ததாக 1/3 பங்கிற்கும் குறைவானோர்தெரிவித்துள்ளனர். இந்நிலையானது இவர்களது முன்னேற்றகரமான நிலையை காட்டுகின்றது. கடன்சுமை என்பதும் ஒருவரை வறுமை நிலைக்குத் தள்ளும் விடயமாகும். ஏனெனில் கடன் என்பது தன்னிடமிருக்கும் இருப்பில் பிறரின் உரிமையும் சேர்ந்திருப்பதைக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல், பல்வேறு உளவியல் தாக்கங்களையும் ஏற்படுத்தவல்லது. ஏனெனில், வறுமையில் உழல்வது ஒருவரின்

மூளைத்திறனை பாதிப்பதாக இந்தியாவிலும், அமெரிக்காவிலும் நடந்துள்ள இரு ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. (பி.பி.சி, 02 செப்டம்பர்,2013) எனவே, இவ்விபரீதமான கடன் சுமையை இவர்களால் நீக்க முடிந்தமை சிறுகைத்தொழில் மூலம் அடைந்த சாதகமான விளைவாக அமைகின்றது.

மேலும், ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் மிகக் குறைவானோர் தாம் பெற்ற வருமானம் மூலம் தம் அடிப்படைத் தேவைகள் போக தம் தொழிலையும் விருத்திசெய்துள்ளனர். இந்நிலையும் சிறுகைத்தொழில் மூலம் அடைந்த முன்னேற்றகரமான நிலையை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் அனைவராலும் இவ்வாறு விருத்தி செய்ய முடியவில்லை.

எனினும், கடன் பெற்ற அனைவரும் தாம் மாதாந்தம் மீளச்செலுத்த வேண்டிய தொகையினை தவறாது செலுத்தியுள்ளனர். ஏனெனில், தன் நற்பெயரை பாதுகாக்கவேண்டும், குற்ற நிலைக்குட்படக் கூடாது, தம் மீது நம்பிக்கையை ஏற்படுத்தினாலே மீண்டும் கடன்பெற முடியும் போன்ற எண்ணங்களின் காரணமாக தமது கஷ்ட நிலைகளுக்கு மத்தியிலும் மாதாந்த கடன் கட்டணத்தை இவர்கள் மீளச் செலுத்துகின்றனர். எனினும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிவழங்கல் நிறுவனங்களுள் வட்டி அடிப்படையிலான நிறுவனமும் வட்டியற்ற நிறுவனங்களும் காணப்படுவதால், பெற்ற கடனை மீளச் செலுத்தும் போது மேலதிகமாக வட்டியும் செலுத்த வேண்டியிருப்பதானது, இவர்களது நிலையை மேலும் பாதிப்பதாக கள ஆய்வின் மூலம் அறிய முடிந்தது.

ஒருசிலரால், தொழிலை மேம்படுத்துதல், கடன்சுமையை நீக்குதல், குழந்தைகளைக்கற்பித்தல் போன்ற விடயங்களை சிறப்பாக தங்கள் வருமானத்தின் மூலம் செய்ய முடிந்த போதிலும், பெரும்பாலானோரால் பூரணமாக தமது அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. ஏனெனில், தாம் மேற்கொண்ட சிறியளவிலான சிறுகைத்தொழில் மூலம் பெற்ற வருமானமானது உணவு, உடை, குழந்தைகளின் கல்வி, வீட்டு மின், குடிநீர் கட்டணங்கள் போன்ற அடிப்படைத் தேவைகள் மத்தியில் பகிரப்பட வேண்டியுள்ளது. இதற்கு அப்பால் தமது தொழில் இயந்திரத்தின் திருத்த வேலைகள், மூலப்பொருள் கொள்வனவு, வீட்டின் அத்தியவசிய திருத்த வேலைகள் என பல முக்கிய தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.எனவே இவர்களின் வருமானமானது இவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதாமல் இருப்பதானது இவர்களது வறுமை நிலையை பறைசாட்டுகின்றது.

ஏனெனில், வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட, வாழ்க்கைத் தரத்தை தீர்மானிப்பவற்றை இழந்த நிலை ஆகும். (தி இந்து வெள்ளி, 2014)

மேலும், வறுமையை முற்றிலும் வறுமை (absolute poverty) என்றும், ஒப்பீட்டு வறுமை (relative poverty) என்றும் இரு வகைப்படுத்தலாம். முற்றிலும் வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானம் அக்குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக் குறைவாக இருப்பதாகும். மிகக் குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்திற்கும் கீழான நிலையில் உள்ளவர்களைக் இது குறிக்கும். ஒப்பீட்டு வறுமை என்பது இரண்டு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்திற்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பதாகும். (www.businessdictionary.com)

எனவே, ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரை நோக்கும் போது, இவர்கள் தம் அடிப்படைத் தேவைகளை முற்றிலும் இழந்தவர்களாக இல்லை. ஏனெனில், வறுமைக்குட்பட்டிருந்த அவர்கள் நிதிபெறல் மூலம் சிறுகைத்தொழிலை மேற்கொண்டமையினால் அவர்களால் தங்களது அடிப்படைத்தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ய முடியுமாக உள்ளது. இந்நிலையானது இவர்களது வறுமை நிலை ஓரளவு நீங்கியுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது.

எனினும்,இவர்களால் தம் அடிப்படைத் தேவைகளை தம் வருமானத்தின் மூலம் ஓரளவு நிவரத்தி செய்ய முடியுமாக இருப்பதால் இவர்கள் மத்தியில் வறுமை நிலையானது ஓரளவு நீங்கியுள்ளது என்று கூற முடியுமே தவிர,வறுமை நிலை முழுமையாக நீங்கியுள்ளது என்று கூறமுடியாது.

எனவே ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் மத்தியில் அவர்கள் மேற்கொண்ட சிறுகைத்தொழில்கள் மூலம் அவர்களது வறுமை நிலையானது ஓரளவு நீங்கியுள்ளமையை தரவுப்பகுப்பாய்வு மூலம் அறிய முடியுமாக உள்ளது.

**முடிவுரையும் விதந்துரையும்**

இவ்வாய்வின் அடிப்படையில் பின்வரும் கண்டுபிடிப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

01. இவ்வாய்வின் முதலாவது கண்டுபிடிப்பாக,மருதமுனை பிரதேசத்தில் நிதிபெறல் மூலம் சிறுகைத்தொழிலை மேற்கொள்கின்ற மக்கள் மத்தியில் வறுமை நிலை போதியளவு நீங்கவில்லைஎன்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

    இதற்கான பிரதான காரணங்களாக

    - வழங்கப்பட்ட நிதி போதாமை, இதனால்,தனது தேவைகளை பூர்த்தி செய்ய இன்னும் வேறு இடங்களை நாட வேண்டியிருந்தமையால், பல இடங்களுக்கும் மாதாந்தப் பணத்துடன் சேர்த்துவட்டியையும் மீளச்செலுத்தவேண்டி ஏற்பட்டதால், உழைக்கும் வருமானமானது, பெற்ற கடனை தீர்ப்பதற்கே போதுமானதாக அமைந்தமை

- தம் தொழில் துறை மூலம் பெறப்பட்ட வருமானத்தினால் தமது நாளாந்தத் தேவைகளான உணவு, குழந்தைகளின் கல்விச்செலவுகள் மற்றும் வீட்டு மின், நீர் கட்டணங்களுக்கான செலவுகள் என்பவற்றைக் கூட பூரணமாக நிறைவேற்ற முடியாமை

- வீட்டை பழுது பார்த்தல்,தொழிலை விருத்தி செய்தல் போன்ற முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாமற் போனமை

ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன.

02. இவ்வாய்வின் இரண்டாவது கண்டுபிடிப்பு,மருதமுனைப் பிரதேசத்தில் சிறுகைத்தொழிலிற்கென நிதிவழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், குறித்த சிறு கைத்தொழில்களில் போதியளவு விருத்தி ஏற்படவில்லை.

இதற்கான காரணங்களாக வழங்கப்பட்ட நிதி போதாமை, நிதி பெற்றோரது முயற்சி போதாமை, குறித்த ஒரு தொழிலிலேயே தங்கியிருந்தமை, விருத்தி செய்யுமளவுக்கு வசதி இல்லாமை,விதவைப் பெண்கள் உதவியின்மையால் தொழிலை இடை நிறுத்தியமை, உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாமை, போட்டிச் சந்தைக்கு முகம் கொடுக்க முடியாமை, பொருத்தமான தொழில் வழிகாட்டல் கிடைக்காமை ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன.

**விதந்துரைகள்(Recommendations)**

❖ மருதமுனைப் பிரதேசத்தைப் பொறுத்த வரை வழங்கப்படும் நிதித் தொகை ஒரு இலட்சத்திற்கும் குறைவாக இருப்பதனால் தனது தேவைகளை பூர்த்தி செய்ய இன்னும் வேறு இடங்களை நாட வேண்டியிருப்பதாகவும், பல இடங்களுக்கு மாதாந்தம் பணம் மீளச்செலுத்தவேண்டி இருப்பதால், உழைக்கும் வருமானமானது, பெற்ற கடனை தீர்ப்பதற்கே போதுமானதாக அமைவதாக களஆய்வின் போது அறியக்கிடைத்தது. எனவே குறித்த நிதி நிறுவனங்கள் அவரவர் தொழில் துறைகளுக்கேற்ப போதியளவு நிதித் தொகையினை வழங்கக்கூடிய நிலைக்கு வரவேண்டும். இதன்மூலம் நீண்ட காலத்திற்கு சிறுதொகையினை தொடர்ந்து மீளச்செலுத்தும் போது மீதப்படுத்த முடியுமான வருமானத் தொகையைக் கொண்டு அவர்களால் தமது அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யவோ அல்லது ஏதாவது விருத்தி செயற்பாடுகளைச் செய்யவோ முடியும்.

- ❖ நிதிபெற்றவர்களும் சரியான திட்டமிடலுடன் பயன்படுத்தும் போது மட்டுமே குறித்த தொழிலை விருத்தி நிலையின் பால் இட்டுச் செல்ல முடியும்.

- ❖ குறித்த தொழிலை ஆரம்பிக்க நிதி பெற்றவர்கள் நிதியினை பூரணமாக மீளச் செலுத்தியதன் பின்னர் தனது தொழிலை விருத்தி செய்யவெனவும் மீண்டும் கடன்பெற்று தனது நிலையை மேம்படுத்தலாம்.

- ❖ நிதி வழங்கும் நிறுவனங்கள் வட்டியை தவிர்த்து இலவசக் கடனை வழங்க முன்வருவதன் மூலம் கடன்பட்டோர் வட்டி மூலம் சுமக்கும் மேலதிக சுமையிலிருந்து அவர்களை மீட்கலாம்.

- ❖ இலவசக்கடன் மற்றும் சிறுகைத்தொழிலிற்கான மானிய வசதிகளை அரசு வழங்குவதன்மூலம் மக்களை சிறுகைத்தொழிலின் பால் தூண்டுவதோடு, அவர்களின் வறுமை நிலையையும் நீக்கலாம்.

- ❖ கைத்தொழில் வழிகாட்டல் நிகழ்வுகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நடாத்தலாம்.

- ❖ சிறுகைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகளை சந்தைப்படுத்தலிற்கான ஏற்பாடுகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

- ❖ பாரிய முதலீடு, கூட்டுத் தொழில் முயற்சி என்பவற்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமிடத்து வருமானமும் அதிகரித்து வறுமை நிலையையும் நீக்கலாம்.

**உசாத்துணைகள் (BIBILOGRAPHY)**


Judith Bell, (1999). *Doing your Research Project*: *A guide for first time researchers in education and social science*. New Delhi: VIVA Books Private Limited.

Omobolanle Okiki Sanni, (2009), Problems of Establishing a Small Business Enterprise in Nigeria, Case Study: Alahteef Nig Ltd. [online]. Available: https://www.theseus.fi/bitstream/handle/10024/6277/Sanni_Omobolanle_Final_Thesis.pdf[Accessed January 25. 2016]

ஜோதி சிவஞானம், வறுமைக் கோடு என்றால் என்ன?, தி இந்து வெள்ளி, ஜனவரி 17, 2014.

Gail Sahar Zucker & Bernard Weiner, Conservatism and Perceptions of Poverty: An Attributional Analysis. [online]. Available: http://onlinelibrary.wiley.com/doi/10.1111/j.1559-1816.1993.tb01014.x/epdf?r3_referer=wol&tracking_action=preview_click&s

how_checkout=1&purchase_referrer=onlinelibrary.wiley.com&purchase_site_license=LICENSE_DENIED[Accessed January 25. 2016]

விக்கிபீடியா https://ta.wikipedia.org/wiki/%E0%AE%B5%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%88[Accessed January 27. 2016]

Shyam Bhati, India: the role of small-scale industries in an emerging economy. [online]. Available: http://ro.uow.edu.au/cgi/viewcontent.cgi?article=1780&context=commpapers[Accessed January 27. 2016]

Garg, Charu C.,Growth of small scale industries in India: Some policy issues, [online]. Available:https://ideas.repec.org/p/npf/wpaper/96-10.html[Accessed January 29. 2016]

Micro, Small & Medium Enterprise finance in India, (2012), International Finance Corporation – World Bank Group.[online]. Available:http://www.ifc.org/wps/wcm/connect/4760ee004ec65f44a165bd45b400a808/MSME+Report-03-01-2013.pdf?MOD=AJPERES[Accessed January 29. 2016]

Oguntoye Olatunji,THE FINANCING OF SMALL SCALE INDUSTRY IN NIGERIA. PROBLEMS AND PROSPECTS. [online]. Available:http://www.academia.edu/2651691/THE_FINANCING_OF_SMALL_SCALE_INDUSTRY_IN_NIGERIA._PROBLEMS_AND_PROSPECTS[Accessed February 07. 2016]

Shrikrishna S. Mahajan & Parashram J. Patil, FINANCIAL NEEDS OF A SMALL SCALE INDUSTRY:A CASE STUDY OF CASHEW-NUT INDUSTRY, [online]. Available: https://www.google.lk/webhp?sourceid=chrome-instant&ion=1&espv=2&ie=UTF-8#q=research+paper+on+small+scale+industries++with+grants&start=10[Accessed February 07. 2016]

Amy Rynell, (2008), Causes of poverty: Findings from recent research, The Heartland Alliance Mid-America Institute on Poverty. [online]. Available:http://www.woodsfund.org/site/files/735/69201/260704/363127/causes-of-poverty_report_by_Heartland_Alliance.pdf[Accessed February 23. 2016]

http://www.businessdictionary.com/definition/poverty.html[Accessed March 23. 2016]

**நேர்காணல்**

Mubeen, M.S.M,(2016.01.04)In Charge for Loan, Micro Investment Project, Maruthamunai.

Sanufa,M.A.S,(2016.01.12) In Charge for Loan, Loan for Guidance for Self Employment, Maruthamunai.

Mubeen, M.M.M., (2016.01.17), Manager, Divinaguma Community Based Bank, Maruthamunai.